தொகுதி 1
சித்திரம் 11

# பொன்னிவளநாட்டின் வீர சரித்திரம்



# சாப நிவர்த்தி

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing




பகுதி-1 சித்திரம்-11

# சாப நிவர்த்தி

குன்னுடையானும்,தாமரையும் குழந்தை வரம் வேண்டி மகாவிஷ்ணு கூறிய புண்ணிய காரியங்கள் அனைத்தையும் ஒவ்வென்றாக செய்யத் தொடங்கினர். அதன் ஒரு அங்கமாக,தேர் இழுத்தல் இடம்பெற்றது. அதன்போது, அவர்களின் தலையை தேர்ச்சக்கரத்தில் கொடுத்து உயிரை பறிக்க பங்காளிகள் சதி செய்தனர். ஆனால், விஷ்ணுவின் உதவியால் காப்பாற்றபட்டு, தங்களது பரிகாரங்களை செய்து முடிக்க ஆயத்தமானார்கள்.









மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா


சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.



விஷ்ணு! எனக்கு குழந்தை பாக்கியமே இல்லையென்று ஜாதகத்தை பார்த்து சொல்லிவிட்டார். அதைக் கேட்டதும் என் இதயம் நொறுங்கிவிட்டது.
இந்த ஜென்மத்தில் மட்டும்மில்லாமல்,இனி தொடர்ந்து வரும் ஜென்மங்களிலும் குழந்தை பிறக்காதென்று கூறிவிட்டார்.
குழந்தையில்லாத அவமானத்தை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. இந்த நிலையை போக்க நான் அவர் கூறிய பரிகாரங்களை செய்யவேண்டும்.




குன்னுடையானுக்கும்,தாமரைக்கும் முக்கியமான நாள்.விஷ்ணு,அவர்களுக்கு குழந்தை பாக்கியத்தை பெறச்செய்யவேண்டிய பரிகாரங்களை சொல்லத்தொடங்கினார்.




கால்நடைகளுக்கு தண்ணீர்த்தொட்டிகளும், இளைப்பார கொட்டாரங்களும் அமைக்க வேண்டும்.
பின்,அரசும் வேம்புமாக இணைந்து வளர்ந்துள்ள மரத்திற்கு திருமணம் செய்ய வேண்டும்.
செல்லாத்தாளுக்கு அழகிய தேர் ஒன்றை செய்து,விழா கொண்டாடவேண்டும் .
ஆயிரம் யாசகர்களுக்கு அன்னதானம் செய்யவேண்டும்.
இறுதியாக, நீங்கள் கட்டிய பெரிய தூணின் மேல் அகல் விளக்கை வைத்து,நெய்யை ஊற்றி,திரி இட்டு, தீபம் ஏற்ற வேண்டும்.
அந்த ஜோதியின் ஒளி தெய்வசபைக்கு தெரிய வேண்டும்.
அப்படியே செய்கிறோம்.சுவாமி!. தாங்கள் தான் துணை நிற்க வேண்டும்.


அனைத்து பரிகாரங்களும் நிறைவேறியதும்,கார்த்திகை முதல் திங்களில்,புண்ணிய பூமியான காசிக்கு வர வேண்டும்.
நான் கூறியவைகளை செய்து முடித்தால்,உன் மண்ணைக் காக்க இரண்டு ஆண்களும், மனையைக் காக்க ஒரு பெண்ணும் கிடைக்க வரமளிப்பேன்.
விஷ்ணு தன் வரத்தை வாக்காக கொடுத்தார்.
சரி! அப்படியே செய்கிறோம். பரந்தாமா! குழந்தை வரம் கிடைத்தால் போதும்.
எங்களுக்குப்பின் இந்த பொன்னிவளநாட்டை அவர்கள் ஆள வேண்டும்.
உங்களுடைய ஆசீர்வாதம் எப்பொழுதும் எங்களுக்கு தேவை.


அடுத்த நாள் காலையில் குன்னுடையான் பக்கத்து ஊரிலிருந்து கொத்தனார்களை அழைத்தார்.
கொத்தனார்களே!
பொன்னிவளநாட்டில் ஒவ்வொரு காததூரத்திற்கு ஒரு கிணறு வெட்ட வேண்டும். அத்தோடு,மக்கள் இளைப்பாறிச்செல்ல மண்டபங்கள் கட்ட வேண்டும்.
சரி சாமி! அப்படியே செய்கிறோம்.
பணிப்பெண்ணே! ஒரு வள்ளம் முத்து எடுத்து வந்து இவர்களுக்கு கொடு.
பணிப்பெண் முத்துக்களை கொண்டு வந்து கொடுத்தாள்.
சரி! வேலையை விரைவாக ஆரம்பியுங்கள்.


அடுத்து,கோயில் பூசாரியை அழைத்தனர்.
அந்தணரே!
நாங்கள் அரசமரத்திற்கும்,ஆலமரத்திற்கும் நாளை காலையில் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளோம்.அதற்கு,என்ன பொருட்கள் வேண்டும்?
முதலில் மாங்கல்யம் செய்ய வேண்டும்.
அதனுடன் அரைப்படி நெய்...
மற்றும் தேங்காய், பழம்...
வெற்றிலை, பாக்கு ..
நூல்ச்செண்டு, மஞ்சள்.
இவையனைத்தும் இருந்தால் பூஜையை ஏற்பாடு செய்கிறேன்.
சரி! பணிப்பெண்ணே! சுவாமிகள் கேட்டதை தயார் செய்!.


காலையில் விநாயகர் கோவிலுக்கு அருகில் வந்து விடுங்கள்.
அங்கே தான் இரண்டு மரங்களும் ஒன்றாக வளர்ந்துள்ளன.
நன்றி அந்தணரே!
குவாக்
குவாக்
அடுத்த நாள் காலையில் பூஜையை தொடங்கினர்.
பூசாரி இரண்டு மரத்திற்கும் திருமணத்தை நடத்தி முடித்தார்.


ஒவ்வொறு பரிகாரங்களாக செய்து முடித்த தாமரையும்,குன்னுடையனும் இறுதியாக, ஆசாரிகளை அழைத்தனர்.
ஆசாரிகளே! குலதெய்வம் செல்லாத்தாளுக்கு அழகிய தேர் ஒன்று செய்ய வேண்டும்.
சரி! மன்னா! உங்கள் நல்ல மனம் போல் செய்துதருகிறோம்.
அந்த வேங்கை மரம் நம் வெள்ளாங்குளத்து ஏரியில் இருக்கிறது.
குழந்தை வரம் வேண்டி, கோயிலுக்கு தானமாக செய்வது.
தேர் மிகவும் நேர்த்தியுடன் இருக்க வேண்டும் அதை வேங்கைமரத்தில் செய்யுங்கள்.
சரி! நாங்கள் இப்பொழுதே சென்று ஆகவேண்டியவைகளை பார்கின்றோம்.
நல்லது! வேலைகள் அனைத்தையும் முப்பது நாட்களில் முடிக்க வேண்டும்.


வெள்ளாங்குளத்து ஏரியில்...
அதோ! அந்த மரம்.
வாருங்கள் வேலையை துவங்கலாம்.
ச்ச்ச் ச்ச்ச் ச்ச்ச்
ச்ச்ச் ச்ச்ச் ச்ச்ச
சரக் சரக் சரக் சரக்
அவர்கள் மரத்தை அறுக்கும் போது...
ஆ! என்ன சத்தம் அது!
ஏதோ விபரீதத்தின் முன் அறிகுறி போல் இருக்கிறது.
பரவாயில்லை! நீ அதைப்பற்றி கவலைப்படாதே.
மரம் வெட்டும் வேலையை மட்டும் ஒழுங்காக பார்.


ஆசாரிகள் தேரை உருவாக்க கடுமையாக உழைத்தனர்.
அப்போது அங்கே குன்னுடையானின் பங்காளிகள் வந்தனர்.
ஆசாரிகளே!
குன்னுடையான், செல்லாத்தாகோவிலுக்கு தேர் செய்வதாக கேள்விப்பட்டோம்.
நாங்கள் சொல்வது போல் செய்தால் நீங்கள் செல்வந்தர்கள் ஆகலாம்.
என்ன?
அப்படி! என்ன நாங்கள் செய்யவேண்டும்?
தேர், திருவிழாவிற்கு தயார் ஆனதும்..
அதை நாங்கள் வடம் பிடித்து இழுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.
குன்னுடையானின் பங்காளிகள்,ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த ஆசாரிகளிடம் செல்வந்தர்களாக்குவதாக கூறி,அவர்களின் மனதை மாற்றினார்கள்.பின் தமது திட்டத்தை விவரித்தனர்.



சரி! நீங்களே தேரை இழுங்கள்.
தேரை நாங்கள் இழுக்க தொடங்கி சிறிது தூரம் சென்று..
வடக்கு பக்கமாக திரும்பும்போது..
நீ அதை நிறுத்தவேண்டும்.
உடனே, அங்குள்ள மக்கள் என்னவென்று கேட்பார்கள்.
அப்பொழுது, உங்களில் ஒருவர் பின்வருமாறு கூற வேண்டும்...



...செல்லாத்தா நேற்றிரவு கனவில் வந்ததாகச் சொல்லவேண்டும்.
தேர் இழுப்பது மட்டும் தனக்கு போதாது என்றும்..
குன்னுடையானும்,தாமரையும் தேர்ச்சக்கரத்திற்கு அடியில் தங்கள் தலைகளை வைக்கவேண்டும்.
இதை செய்தால் மட்டுமே தேர் நகரும் என்றும், இல்லையேல்?
நகராது என்றும், சொன்னதாக சொல்லிவிடுங்கள். இதை செய்தால், அவர்களின் சொத்தில் பாதியை உங்களுக்கு தருகிறோம்.
ஆ!
இதை நாங்கள் செய்யத்தான் வேண்டுமா?
எத்தனை நாள் தான் வறுமையுடனே வாழ்வது?
சரி! நாங்கள் இதைச்செய்ய உடன்படுகிறோம்.
பங்காளிகளின் திட்டத்திற்கு ஆசாரிகள் ஒத்துக் கொண்டனர்.




பப்ப பப்ப ப்பாாாாாா
தேர் திருவிழா வெகு சிறப்பாக ஆரம்பமானது. மேளதாள வாத்திய முழக்கங்களுடனும்..
ப்பீபீயியியி
டும் டும் டும்
டும்
மானாட்டம், மயிலாட்டம் மற்றும் பொய்க்கால்குதிரையாட்டத்துடனும்..
செல்லாத்தாளுக்குப் பூஜை அமர்க்களமாக நடந்தது. மக்கள் வெகுதூரத்திலிருந்து வந்திருந்தனர்.


கோவிலைச்சுற்றி சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. தேர் இழுக்கும் நேரம் வந்தது!…..
ம்! ஆரம்பியுங்கள்!


மகா
விஷ்ணுவே!
பரமாத்மாவே!
நல்ல படியாக தேரை இழுத்து முடிக்க ஆசீர்வதியுங்கள்.
கயிறுகளை பிடியுங்கள்! தேரை இழுக்க தொடங்குவோம்.
இதுவே சரியான நேரம்...
இந்த உலகத்தை விட்டே இவர்களை அனுப்ப...


அனைவரும் சேர்ந்து தேரை இழுத்து, சன்னக்கட்டையை வைத்து தேரைத் திருப்பினர்.
ஆ....!
தேருக்குள் அந்தணரும், ஆசாரியும் இருந்தனர்.
சக்க்


தேர் அழகாக அசைந்து சென்றது.பாதையெங்கும்,மக்கள் தேங்காய்களை உடைத்தனர்.
மக்கள் உற்சாகமாக கோஷங்களை எழுப்பியபடி இழுத்துச்சென்றனர்.
இழுங்கள்! இழுங்கள்!
தேர் வடக்கே திரும்பியதும்,ஆசாரிகள் மரக்கட்டையை தேர்ச்சக்கரத்தில் இட்டு தேரை நிறுத்தினர்.
சக்க்க்


ஆசாரி!
ஏன் தேர் நின்றுவிட்டது? தொடர்ந்து செல்லட்டும்.
அனைவரும் மவுனமாக இருந்தனர்.
ஆசாரி தேரிலிருந்து அலறிக்கொண்டு குதித்தான்.
அ…ம்..ம…ா
என்ன ஆசாரி!, என்ன?
சாமி! அதை எப்படி என் வாயால் சொல்வது?


பரவாயில்லை ஆசாரி!சொல்.
சாமி! என்னை மன்னிக்கனும்!நேற்றிரவு செல்லாத்தா என் கனவில் வந்தாள்.
அவள், தேர் இழுப்பது மட்டும் போதாது என்றாள்.
அடக்கடவுளே! வேற என்ன சொன்னாள்?
நீங்கள் இருவரும், தங்களின் தலைகளை தேருக்கடியில் வைக்க வேண்டும்
அப்பொழுது தான் தேர் மீண்டும் நகரத்தொடங்குமாம்.
ஆசாரி! எப்பொழுது செல்லாத்தா உன்னிடம் பேசினாள்?
அம்மா!
நேற்றிரவு... தாயே!.



தாயே! செல்லாத்தா! உன் நெஞ்சு கல்லாகிவிட்டதா?
உனக்காக தேர் செய்து, சிறப்பாக திருவிழா எல்லாம் எடுத்தோமே.
எப்படி?, எங்களை வஞ்சிக்க உனக்கு மனசு வந்தது.
உனக்கு தேர் இழுப்பது மட்டும் போதாது என்றால், அதை எங்களிடம் சொல்லியிருக்கலாமே?
உனக்கெல்லாம் எதற்கு பூஜையும், தேர்த்திருவிழாவும்.
இனி,இந்த பங்காளிகளே!,உனக்கு பூஜை செய்யட்டும்.
நீ விரும்பியதை செய்ய நாங்கள் தயாராகி விட்டோம்.



உன் தேர்ச்சக்கரத்தில் எங்கள் தலையை வைக்கப்போகிறோம்.
அது தானே! நீ எங்களிடம் இருந்து எதிர்பார்த்தது.
தாமரையும்,குன்னுடையானும் தேரின் முன்பாக நிலத்தில் மண்டியிட்டனர்.
ம்..! தேரை இழுங்கள்.
வேகமாக இழுங்கள்!.
ஆ---


வைகுந்தத்தில் இருந்து இதை பார்த்த விஷ்ணு,அவர்களை காப்பதற்காக, ஈயாக வடிவெடுத்து விரைந்து பூமிக்கு வந்தார்.
பஷ்ஷ்
பஷ்ஷ்
தேர் நகரத்தொடங்கியதும்,தன் சக்தியினால் அதை மின்னல் வேகத்தில் உயரத்திற்கு பறக்கச்செய்தார்.அதனால்,ஆசாரிகளும், பங்காளிகளும் மடிந்தொழிந்தனர்.
ஆ.....ஆ...!
ஐய்யோ.......!
ஓ...ஓ...



மக்கள் சிதறி ஓடினார்கள்.ஒரு ஆசாரி மட்டும் உயிர் பிழைத்தான்.
ஓடு...ஓடு...
கடவுள் புண்ணியத்தால் பிழைத்தேன்.
இங்கிருந்து உடனே சென்று விடவேண்டும்.
சரியான சமயம் வரும் போது பழிவாங்கலாம்.
தாமரை! நாம் ஏன் இன்னும் இறக்கவில்லை?
விஷ்ணுதான் நமது உயிரை காப்பாற்றியுள்ளார்.
ஆனால்! நிறையப்பேர் இறந்துவிட்டனர்.



நாட்கள் சென்றது. விஷ்ணு கூறியது போல் தம்பதிகள்,ஒவ்வொரு புண்ணிய காரியங்களாக செய்து இறுதிக்கட்டத்தை அடைந்தனர்.
நாதா! நாம் இன்னும் இரண்டு பரிகாரங்களை செய்தால் அனைத்தும் நிறைவடைந்துவிடும்.
ஆம்! அவைகளையும் சீக்கிரமாக செய்யவேண்டும்.
முதலில்,வருகிற திங்கட்கிழமை ஆயிரம் யாசகர்களுக்கு அன்னதானம் செய்வோம்.
ஆகவே,தாங்கள் ஸ்ரீரங்கம் சென்று யாசகர்களை அழைத்து வாருங்கள்.
குன்னுடையான் ஸ்ரீரங்கத்துக்கு புறப்பட்டுச்சென்றார்.



ஸ்ரீரங்கத்தை அடைந்த குன்னுடையான்,தெருவில் சில சந்நியாசிகள் வருவதை பார்த்துவிட்டு...
சுவாமிகளே! எங்கேயிருந்து வருகிறீர்கள்?
நாங்கள் வடக்கே இருக்கும் நகரத்திலிருந்து வருகிறோம்.
ஓ..! அப்படியா.
இன்று மதியம் என் அரண்மனையில் விருந்து வைக்கிறேன். அனைவரும் வாருங்கள்.
மிக்க நன்றி! அவசியம் வருகிறோம்.


குன்னுடையான் அவர்கள் அனைவரையும் பொன்னிவளநாட்டிற்கு அழைத்து வந்தார்.வரும் வழி தோறும் மேலும் பல யாசகர்கள் சேர்ந்து கொண்டனர். தாமரை மதிய உணவிற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தாள்.
தாமரை! நான் ஆயிரம் யாசகர்களை அழைத்து வந்திருக்கிறேன்.
பணிப்பெண்ணே!
அனைவரும் வந்திருக்கிறார்கள் உணவு தயாராகிவிட்டதா?
அரண்மனை ஆயிரம் யாசகர்களால் நிரம்பி வழிந்தது.
தாமரை அனைவருக்கும் உணவு பரிமாறினாள்.



அனைவரும் மனதார வாழ்த்தினார்கள்.
விஷ்ணுவும் யாசகராக உருமாறி அங்கே வந்திருந்தார் .
தாமரை! நான் கூறியது அனைத்தும் செய்தீர்களா?
எல்லாம் முடிந்தது,ஒன்றைத் தவிர
கோவில் முன்பாக உள்ள கம்பத்தில் விளக்கு ஏற்ற வேண்டும்.


நல்லது தாமரை!
அதையும் விரைவாக செய்து முடியுங்கள். இறுதியாக, காசிக்கு வரவேண்டும்.
அங்கே, பொன்னம்பலத்தில் உள்ள அரசமரத்தடியில் உங்களை சந்திக்கிறேன்.
பெண்ணே! ஒரு பாத்திரத்தில் ஏழுபடி பசுநெய் ஊற்றி,பெரிய திரி இட்டு..
அதை செல்லாத்தாகோவிலின் முன்பாக உள்ள கம்பத்தில் மேல் வைத்து, ஜோதியை ஏற்றி வை.
நானும் என் கணவரும் காசிக்குச்செல்ல இருக்கிறோம்..
சரி அம்மா! அப்படியே செய்கிறேன்.
விளக்கு, தூணின் மேல் ஏற்றி வைக்கப்பட்டது.


பொன்னிவளநாட்டு மக்கள் அந்த தம்பதியினருக்கு பரிசுகள் பல கொடுத்து வாழ்த்தினர்.
மக்களே! நாங்கள் காசி போய்த்திரும்பி வர இருபத்தியொரு வருஷம் ஆகும்.
அனைத்தையும் கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள்.
ஓ..! மகா விஷ்ணு!
எங்கள் அரண்மனையை நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும்.
அவர்களின் வேண்டுகோளை கேட்ட விஷ்ணு வண்டுகளை அனுப்பினார்.
வண்டுகளே! அரண்மனைக்கு காவலாக இருங்கள்.


இருவரும் செல்லாத்தா கோவிலுக்கு சென்றனர்.
தாயே! செல்லாத்தா!
நாங்கள் காசிக்குச்செல்ல இருக்கிறோம்.
எங்களுக்கு வழித்துணையாக இருந்து காக்க வேண்டும்.
பொன்னிவளநாட்டில் இருந்த மக்களுக்கு மட்டுமல்ல,விலங்களுக்கும், அவர்கள் காசிக்கு செல்வது தெரிந்திருந்தது.
குழந்தையில்லாத,தம்பதியினர் தமக்கிடையே பேசிக்கொண்டிருந்தனர்.
குன்னுடையாக்கவுண்டரும், தாமரையும் காசிக்கு, குழந்தை வரம் வாங்கப்போகிறார்களாம்.
அப்படியே,நமக்கும் குழந்தை வரம் வாங்கி வரச்சொல்லலாமா?


அம்மா! எங்களுக்கும் குழந்தை வரம் வாங்கிவரவேண்டும்.
எங்களுக்கு பிறக்கும் மகன்,பதினாறு யானையின் பலமும், மின்னலைவிட வேகமாக ஓடுபவனாகவும் வரம் வாங்குங்கள்.
அப்போது தான்,அவன் உங்களுக்கு பிறக்கும், மகனுக்கு காவலாக இருப்பான்.
சரி பெண்ணே! அப்படியே வரம் வாங்கி வருகிறோம்.
விரைவில்,அவர்களை மாடுகள் மற்றும் குதிரைகள் சந்தித்து,தமக்கும் வரம் வாங்கி வரும்படி கூறின.
தயவுசெய்து! எங்களுக்கும் குழந்தை வரம் வாங்கி வாருங்கள்.
தாமரை அவைகளுக்கும் வரம் பெற்று வருவதாகக் கூறினாள்.


தம்பதியினர் காசிக்குப் புறப்பட்டனர்.
குன்னுடையானும், தாமரையும் விஷ்ணு கூறிய அனைத்துப் பரிகாரங்களையும் செய்து முடித்தனர். ஆபத்தை எதிர்கொண்டாலும், அவற்றையெல்லாம் கடவுளின் துணையுடன் வெற்றி கொண்டனர். இப்பொழுது, முடிவாக வெகுதூரப்பயணம் செய்து காசிக்கு செல்கின்றனர். இந்த இருபத்தியொரு வருஷ பயணத்திற்குப்பின் அவர்களுக்கு, குழந்தை வரம் கிடைக்குமா? இல்லை, இன்னும் பல இன்னல்களை சந்திக்க நேரிடுமா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic11tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!



பகுதி-1



பகுதி-2

01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-52-8
90000 >
9 781927 093528

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing